<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**MCOP.No.189/2024**

பெயர் :– தனலெட்சுமி (P.W.–1)
க/பெ. :– செல்வமுத்துக்குமார்
தேதி :– 11.07.2025.
சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u> :–**

நான் வெள்ளாலழத்தெரு, திருமாந்துறை, திருவிடைமருதுார் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது கணவர் தலையணை, மிதியடி, பாய் வியாபாரம் செய்து வந்தார். மேற்படி பொருட்களை இருசக்கர வாகனத்தில் கொண்டு சென்று வியாபாரம் செய்து வந்தார். எனது கணவர் ஓட்டிய இருசக்கர வாகனத்தின் எண் TN68 U 5503 ஆகும். விபத்து நடந்ததாக சொல்லப்படும் அன்றும் எனது கணவர் மேற்படி வாகனத்தில் பொருட்களை வியாபாரத்திற்காக எடுத்துச்சென்றார். எனது கணவர் வியாபாரத்திற்கு செல்லும்போது பொருட்களை நான் தான் வாகனத்தில் ஏற்றி விடுவேன். TVSவாகனத்தின் பின்சீட்டில் அவர் உட்கார்த்த சீட்டிற்கு உயரமாக தலையணையை அடுக்கி எடுத்துச்செல்வார் என்றால் சரிதான். விபத்து நடந்த அன்றும் அவருடைய இருக்கைக்கு மேல் பாரம்அதிகமாக எடுத்துச்சென்றார் என்றால் சரிதான்.

பொதுவாக இருசக்கர வாகனமானது பயணம் செய்வதற்கு மட்டும் பயன்படுத்தவேண்மே தவிர வியாபராத்திற்கு ஏற்றிக்கொண்டு போகக்கூடாது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் ஓட்டிச்சென்ற வாகனத்திற்கு காப்பீடு உள்ளதா என்றால் உள்ளது. எனது கணவர் ஓட்டிச்சென்ற வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்தீர்களா என்றால் சேர்க்கவில்லை. விபத்து நடந்த இடம் திருவாளங்காடு ஆகும். எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி சென்றபோது விபத்து நடந்தது என்று தெரியுமா என்றால் வியாபரம் முடிந்து திரும்பி வரும்போது நடந்ததாக கூறினார்கள். அவர் வியாபாரம் பார்த்த பணம் அவரது பையில் இருந்தது. விபத்தானது எனது கணவரின் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றாலும், வியாபாரத்திற்கு அவரது உயரத்திற்கு மேல் பொருட்களை ஏற்றிச்சென்றதால் தான் பின்னால் வரும் வாகனம் தெரியாமல் திடீரென்று சாலையில் திரும்பியதால் விபத்து நடந்தது என்றாலும் சரியல்ல. அதனால் இந்த விபத்துக்கு முழுக்காரணம் எனது கணவர் தான் என்பதால் இழப்பீடாது எனது கணவர்

ஓட்டிச்சென்ற வாகனத்தின் காப்பீடு செய்த நிறுனத்திடம் தான் கோரமுடியும் என்றால் சரியல்ல. வழக்கிற்காக இழப்பீடு தொகையும் மாத வருமானமும் மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.